பக்கங்கள்:-14

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | சித்திரை 25 | புதன்கிழமை | 07.05.2025 | அதிர்வு 276

## தமிழ் வாக்காளர்களுக்கு எம் இதயம் கனிந்த நன்றி

**சுமந்திரன் தெரிவிப்பு**



“தற்போது நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் இலங்கைத்

05

# தமிழர் தேசத்தில் திசைகாட்டிக்கு சம்மட்டி அடி!

## தமிழரசு முன்னிலையில் சைக்கிளும் நிமிர்ந்தது

நேற்று நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் வாக்கு எண்ணிக்கை பெரும்பாலும் முடிவுற்று, உத்தியோகபூர்வ அறிவிப்புக்குக் காத்திருக்கும் நிலையில் வடக்கு, கிழக்கில் - தமிழர் தாயகத்தில் - ஆளும் தேசிய மக்கள் சக்தி (திசை காட்டி சின்னக் கட்சி) எதிர்பார்த்த வெற்றிகள் எவற்றையும் பெறவில்லை.

05

## பாக். பயங்கரவாதிகளின் நிலைகள் மீது இந்தியா அதிகாலை அதிரடித் தாக்குதல்

பயங்கரவாதத் தாக்குதல்களைத் திட்டமிட்டு இயக்கிய பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள தளங்கள் மீது இந்தியா இன்று அதிகாலை அதிரடித் தாக்குதல் நடத்தியது. “ஒபரேஷன் சிந்தூர்“ என்ற குறியீட்டுப் பெயரில் இரவு முழுவதும் நடத்தப்பட்ட துல்லிய ஏவுகணைத் தாக்குதல்களில் பயங்கரவாதிகளின் மொத்தம் ஒன்பது தளங்கள் குறிவைக்கப்பட்டன. எனினும், தாக்குதல் நடவடிக்கை விவரங்கள் வெளியிடப்படவில்லை.

05






வியட்நாமுக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அங்கிருந்து அந்த நாடு வழங்கிய விசேட ஜெற் விமானத்தில் நேற்று காலை கொழும்பு வந்து சேர்ந்ததும் உடனடியாக முதல் வேலையாக கொழும்பில் தமது வாக்களிப்பு நிலையத்துக்கு சென்று உள்ளூராட்சித் தேர்தலில் தமது ஜனநாயகக் கடமையை நிறைவு செய்தார்.

ஆனால், முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் நாட்டில் இருந்த போதிலும் நேற்றுத் தமது வாக்குகளை அளிப்பதற்கு வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லவில்லை. அவர்களின் வருகையை சம்பந்தப்பட்ட வாக்களிப்பு நிலையங்களில் எதிர்பார்த்து காத்திருந்த செய்தியாளர்கள், படப்பிடிப்பாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

\+ + +

வடக்கு, கிழக்கில் நேற்று நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் முடிவுகள் ஆளும்

05

# எங்களை நாங்களே ஆள்வதற்காக தமிழ் மக்கள் எமக்கு தந்த ஆணை!

## வல்வெட்டித்துறை வெற்றி குறித்து சிவாஜிலிங்கம் பெருமிதம்

(பிரபாகரன் டிலக்சன்)

ஜே.வி.பியினுடைய பசப்பு வார்த்தைகளை நம்பி ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் அவர்களுக்கு வாக்களித்தமை தவறு என்பதை மக்கள் உணர்ந்து இருக்கிறார்கள். இந்த வெற்றி எங்களை நாங்களே ஆள்வதற்காக மக்கள் எமக்கு தந்த ஆணையாக பார்க்கின்றேன் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய பேரவையின் வல்வெட்டித்துறை நகரசபை முதன்மை வேட்பாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை நகரசபையின் 9 வட்டாரங்களில் 7 வட்டாரங்களில் சைக்கிள் சின்னத்தில் போட்டியிட்ட தமிழ்த் தேசிய பேரவை வெற்றிபெற்றது. இது தொடர்பில் வினாவியபோதே மேற்கொண்டவாறு அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –



இந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்கள் தெளிவான செய்தியை சொல்லியிருக்கிறார்கள். ஜே.வி.பியினுடைய பசப்பு வார்த்தைகளை நம்பி ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் அவர்களுக்கு வாக்களித்தமை தவறு என்பதை மக்கள் உணர்ந்து இருக்கிறார்கள்.

இந்த தேர்தலில் பெருவாரியான வாக்குகளை தமிழ்க் கட்சிகளுக்கு வழங்கியிருக்கிறார்கள். எந்தவொரு வட்டாரத்திலும் அரசாங்க கட்சி வெற்றி பெறவில்லை. விகிதாசாரம் ஊடாக ஜே.வி.பி இரண்டு ஆசனங்களை பெறக்கூடும்.

மக்களின் வாக்களிப்பு சதவீதம் குறைவாக காணப்படுவதால் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் விகிதாசார பிரதிநிதித்துவம் ஊடாக வருகிறார்கள். மக்கள் உறங்கியிருக்காமல் விழிப்பாக இருந்து இனப் பிரச்சினைக்கான தீர்வுக்காக அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து போராடுவதற்கு அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும்.

இந்த வெற்றி எங்களை நாங்களே ஆள்வதற்காக மக்கள் எமக்கு தந்த ஆணையாகப் பார்க்கின்றேன். எங்களினுடைய பயணம் தொடரும்.

வெறுமனே சபைகளில் ஆட்சியை மைபதற்காக மாத்திரமல்லாது இனப் பிரச்சினை தீர்வு விடயத்தில் பொது உடன்பாட்டுக்கு வரும் வகையில் ஏனைய தமிழ்க் கட்சிகள் அனைத்தோடும் இணைந்து செயற்படுவோம்.

# ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரின் மீது திக்வெல்ல கந்த பிரதேசத்தில் கத்திக்குத்து

கேகாலை – தெரணியகல பிரதேச சபைக்கு போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் மீது கத்தி குத்துத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவம் நேற்று திக்வெல்ல கந்த பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

அடையாளந் தெரியாத நபர்களால் இந்த கத்தி குத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அத்தோடு, மோதலில் ஈடுபட்டு காயமடைந்த மேலும் இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



# உலக வங்கியின் தலைவர் அஜே பங்கா இன்று இலங்கைக்கு வருகை தருகிறார்

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் அழைப்பிற்கிணங்க உலக வங்கி தலைவர் அஜே பங்கா

இன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

20 வருடங்களின் பின்னர் உலக வங்கியின் தலைவர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் முதற் சந்தர்ப்பம் இதுவாகும்.

அவர் இங்கு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பிற உயர் அதிகாரிகளைச் சந்திப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும வேலைவாய்ப்பு உருவாக்கத்தை விரைவுபடுத்துதல், தனியார் முதலீட்டை ஈர்த்தல் மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் அவரது வருகையை ஒட்டிக் கவனம் செலுத்தப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.



# சப்ரகமுவ பல்கலை மாணவன் உயிரிழப்பு: மேலும் 2 மாணவர்களுக்கு விளக்கமறியல்


சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவனின் மரணம் தொடர்பில் நேற்று கைது செய்யப்பட்ட மேலும் 2 மாணவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரிகளால் அவர்கள் நேற்று கைது செய்யப்பட்டனர்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தின் மூன்றாம் வருடத்தில் கல்வி பயிலும் அந்த மாணவர்கள் பலாங்கொடை நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போதே விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதற்கமைய குறித்த மாணவனின் மரணம் தொடர்பில் இதுவரையில் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி அனைவரும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.



# மியன்மார் சைபர் குற்ற முகாம்களிலிருந்து மேலும் 15 இலங்கையர்கள் விடுவிப்பு

மியன்மார் சைபர் குற்ற முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மீதமுள்ள 15 இலங்கையர்கள் நேற்று செவ்வாய் கிழமை விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தாய்லாந்து அரசாங்கத்துடன் ஒருங்கிணைந்து வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு மற்றும் தாய்லாந்தில் உள்ள இலங்கை தூதரகம் ஆகியவற்றால் இதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

மியன்மார் – தாய்லாந்து எல்லையில் உள்ள மியாவாடி பகுதியில் உள்ள மெசோத்தில் நேற்று காலை தாய்லாந்து அதிகாரிகளால் தாய்லாந்துக்கான இலங்கை தூதர் விஜயந்தி எதிரிசிங்கவிடம் 15 இலங்கையர்கள் அடங்கிய குழு ஒப்படைக்கப்பட்டது.

வெளியுறவு, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத், தாய்லாந்து வெளியுறவு அமைச்சர் மாரிஸ் சங்கியம்போங்சா மற்றும் மியன்மார் வெளியுறவு அமைச்சர் யூ தான் ஸ்வே ஆகியோருக்கு இடையேயான தொடர்ச்சியான தொலைபேசி உரையாடல்களின் விளைவாக இந்தக் குழு மீட்கப்பட்டது.

சைபர் குற்ற முகாம்களில் சிக்கியுள்ள இலங்கையர்களை மீட்கும் பணியில் இராஜதந்திர ரீதியாக தலையிட்ட தாய்லாந்து தூதரகம், போக்குவரத்து வசதிகளை வழங்கிய சர்வதேச இடம்பெயர்வு அலுவலகம், பிற நலன்புரி வசதிகளை வழங்கிய அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தாய்லாந்து மற்றும் மியான்மர் அரசாங்கங்களின் பங்கை அமைச்சர் விஜித ஹேரத் பாராட்டினார்.

இதற்கு முன்னர் மியன்மார் சைபர் குற்ற முகாம்களில் சிக்கிய 14 இலங்கையர்கள் மார்ச் 18 ஆம் திகதியும், 27 இலங்கையர்கள் டிசம்பர் 17, 2024 அன்றும் திருப்பி அனுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் தேர்தல் தினத்தில் 140 முறைப்பாடுகள் பதிவு

**(பிரபாகரன் டிலக்சன்)**

யாழில் தேர்தல் தினத்தில் 140 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள் ளதாக யாழ் மாவட்ட பதில் அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலக ருமான மருதலிங்கம் பிரதீபன் தெரி வித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில் இதுவரை 302 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. தேர்தல் நடைபெற்ற தினமான நேற்றைய தினத்தில் மாத்திரம் 140 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்றார்.



# பொலிஸை தாக்க முற்பட்ட சந்தேகநபர் மீது துப்பாக்கிச்சூடு

சீதுவ பகுதியில் குழப்பத்தை விளைவிக்கும் வகையில் செயற்பட்ட நபர் மீது பொலிஸாரால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

மேற்படி நபர் பொலிஸ் உத்தியோகத்தரை கூரிய ஆயுதத்தால் தாக்க முற்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

இதன்போது சந்தேகநபரை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸாரால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. சந்தேகநபர் தற்போது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார்.

# பிரித்தானியா செல்ல விண்ணப்பிப்போருக்கு எதிராக கடும் கட்டுப்பாடுகள் விதிப்பு

இலங்கை உள்ளிட்ட நாடுகளிலிருந்து பிரித்தானியாவுக்கு தொழில் மற்றும் கல்வி வீசாவுக்கு விண்ணப்பிப்போருக்கு எதிராகக் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படவுள்ளன.

பிரித்தானிய உள்நாட்டு அலுவலகம் இதனைத் தெரிவித்துள்ளது. குறிப்பாக இலங்கை, பாகிஸ்தான் மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு எதிராக இந்த விடயத்தில் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படவுள்ளன.

இந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் அநேகமாகத் தொழில் அல்லது கல்வி வீசாவில் சட்டரீதியாக பிரித்தானியாவிற்குள் பிரவேசித்து, பின்னர் அரசியல் தஞ்சம் கோருகின்றனர்.

இதனால் பிரித்தானியாவின் வரி செலுத்துனர்களது நிதி வீணடிக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டு எழுப்பப்படுகிறது.

அதற்கு அமையவே இலங்கை போன்ற நாடுகளிலிருந்து தொழில் மற்றும் கல்வி வீசாவுக்கு விண்ணப்பிப்போர் தொடர்பாகக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படவுள்ளன.

இதுதொடர்பான முறைமை ஒன்று தற்போது வகுக்கப்பட்டு வருவதாகவும், பிரித்தானிய உள்நாட்டு அலுவலகம் தெரிவித்துள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசிய மக்கள் சக்திக்கு முக்கியமான சில பாடங்களை போதித்திருக்கின்றன. அவற்றை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க புரிந்து கொள்வாரா என்பதுதான் கேள்வி.

நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கில் பல மாவட்டங்களிலும் அவரது தேசிய மக்கள் சக்தி நிறுத்திய முகம் தெரியாத வேட்பாளர்களுக்காக தமிழ் மக்கள் வாக்களிக்கவில்லை. அநுரகுமார திஸநாயக்க என்ற தனி மனித ஆளுமை மீது நம்பிக்கை வைத்து அளிக்கப்பட்ட வாக்குகளை – அந்த நம்பிக்கையை – அவரது பிரதிநிதிகளாக வடக்கு, கிழக்கில் இதுவரை செயற்பட்டவர்கள் நாசமாக்கி விட்டார்கள் என்ற உண்மையை ஜனாதிபதி உணர்ந்தால் மட்டுமே அவரது கட்சிக்கு வடக்குக் கிழக்கில் ஏற்பட்ட சேதங்களை – சேதாரங்களை – அவர் சீர் செய்ய முடியும்.

வடக்கில் சுவரொட்டிகளில் கூறப்பட்ட மாதிரி கோமாளிப் பிரதிநிதிகளும், ரவுடி அமைச்சரும், கொழும்பிலிருந்து வந்து இங்கு திமிர்த்தனமாக பேசும் அவரது அரசின் அமைச்சர்களும் தமிழ் மக்களின் தேசிய உணர்வைச் சுரண்டி, தட்டி எழுப்பி உசுப்பேத்தி இருக்கிறார்கள் என்பதை இந்தத் தேர்தல் முடிவுகள் காட்டி நிற்கின்றன. அதை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க புரிந்து கொண்டால், தமது கட்சியோடு தமிழ் மக்கள் சேர்ந்து வரக்கூடிய வாய்ப்பை இந்த பிரகிருதிகள் மண்ணாக்கிவிட்டார்கள் என்ற உண்மையை அவர் உணர்ந்து கொள்வார்.

முதலில் வடக்கு மக்களைக் கையாளும் தனது பிரதிநிதிகளை அவர் மாற்றி அமைப்பது 'டமேஜ் கிளியரிங்' என்ற பணிக்கு முக்கியமானது என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும்.

அமைச்சர் சந்திரசேகர் பாணி அடாத்து அணுகுமுறை தமிழ் மக்களை – குறிப்பாக வடக்குத் தமிழ் மக்களை – எரிச்சலுக்குள்ளும் சீற்றத்துக்குள்ளும் உள்ளாக்கி இருக்கின்றது. அவரது எம்.பிக்களின் கோமாளித்தனப் பேச்சும் நடவடிக்கைகளும் தேசிய மக்கள் சக்தி எழுப்பியுள்ள அரசுக் கட்டமைப்பு மீது அவநம்பிக்கையையும் அதிருப்தியையும் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தி இருக்கின்றன.

தமிழ் தேசிய உறுதிப்பாட்டில் இருந்து தமிழ் மக்களைப் பிரித்தெடுத்து, தாஜா பண்ணி, சமாளிப்பதற்கு தென்னிலங்கைக்குக் கிடைத்த அருமையான வாய்ப்பை அநுரகுமார திஸநாயக்க கடைசியில் கோட்டை விட்டு விட்டார்.

தமிழ்த் தேசியத்தை தாங்கள் மறந்தால், சந்திரசேகர் போன்ற அமைச்சர்கள் மற்றும் கோமாளி எம்.பிக்கள் கையாளும் நிலைமைக்கு தாங்கள் தள்ளப்படுவோம் என்ற எண்ணம் தமிழ் மக்களை தமிழ்த் தேசியத்தின் பால் மீண்டும் கட்டுறுதியோடு நெருங்க வைத்துவிட்டது என்பது தான் உண்மை.

இதற்குத் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களை பாராட்டுவதை விட, 'அமைச்சர் சந்திரசேகர் அண்ட் கோ'வைப் பாராட்டுவதுதான் பொருத்தமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

## தமிழ் வாக்காளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழரசுக் கட்சிக்கு வடக்கு, கிழக்கில் வாக்களித்த தமிழ் மக்களுக்கு எமது இதயம் கனிந்த நன்றிகள்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

"நாடாளுமன்றத் தேர்தலில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட பின்னடைவுக்குப் பிறகு மீண்டும் மக்களது ஆதரவைத் தமிழ்க் கட்சிகள் பெற்றுக்கொண்டதில் பெருமிதம் கொள்ளும் அதேவேளையில் நாம் எமது மக்களது நம்பிக்கை வீண் போகாமல் காத்திரமாக சேவை செய்வோம் என்றும் உறுதியளிக்கின்றோம்." – என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

---

## தமிழர் தேசத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வடக்கு, கிழக்கில் தமிழர்களின் தனிப் பெரும் கட்சியாகத் தமிழரசு மீண்டும் தலை நிமிர்ந்தது. அதற்கு அடுத்து பல பிரதேச சபைகளில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் (சைக்கிள் சின்னக் கட்சி) உள்ளடக்கிய தமிழ் மக்கள் பேரவை கணிசமான வெற்றிகளைப் பெற்றிருக்கின்றது.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 13 இடங்களையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 12 இடங்களையும், தேசிய மக்கள் சக்தி 10 இடங்களையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி 4 இடங்களையும், ஈ.பி.டி.பி. 4 இடங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி ஓர் இடத்தையும், ஐக்கிய தேசியக் கட்சி ஓர் இடத்தையும் பெற்றுள்ளன.

வல்வெட்டித்துறை நகர சபை, பருத்தித்துறை நகர சபை, சாவகச்சேரி நகர சபை ஆகிய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள மூன்று நகர சபைகளிலும் முன்னிலையை அகில இலங்கைத்தமிழ்க் காங்கிரஸ் கட்சியை உள்ளடக்கிய தமிழ் மக்கள் பேரவை பெற்றுக்கொண்டது. எனினும், சாவகச்சேரி நகர சபையில் அத்தத் தரப்புக்கு 6 இடங்களும், தமிழரசுக்கு ஆறு இடங்களும் கிடைத்துள்ளன.

கோப்பாயில் தமிழரசுக்கு 11 இடங்களும், தேசிய மக்கள் சக்திக்கு ஒன்பது இடங்களும், தமிழ்க் காங்கிரஸ் மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியவை தலா ஐந்து இடங்களையும், தமிழ் மக்கள் கூட்டணி இரண்டு இடங்களையும், ஒரு சுயேச்சைக் குழு இரண்டு இடங்களையும், மற்றொன்று ஓர் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

வல்வெட்டிதுறை நகர சபையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஏழு இடங்களையும், தமிழரசு ஐந்து இடங்களையும், ஈ.பி.டி.பி. ஓரிடத்தையும், தேசிய மக்கள் சக்தி மூன்று இடங்களையும் பெற்றுக் கொண்டிருக்கின்றன. அங்கு காங்கிரஸின் தலைமை வேட்பாளராக எம்.கே.சிவாஜிலிங்கம் நிறுத்தப்பட்ட போதிலும் அவர் வட்டாரத்தில் போட்டியிடவில்லை. பட்டியலிலேயே அவர் பெயர் இருந்தது. ஆயினும் வல்வெட்டிதுறை நகர சபையில் சைக்கிள் சின்னத்தில் போட்டியிட்ட தரப்புக்கு ஏழு வட்டார வெற்றிகள் மட்டுமே கிடைத்துள்ளன. பட்டியல் வெற்றி கிடைக்கவில்லை. ஆகவே, சிவாஜிலிங்கம் முதன்மை வேட்பாளராக இருந்தாலும் அவர் நகர முதல்வராவதானால் வட்டாரத்தில் அவரது தரப்பில் வெற்றி பெற்ற ஒருவர் இராஜினாமா செய்து அவருக்கு இடம் கொடுக்க வேண்டும் என்ற நிலைமை உருவாகியுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி சபைகளைத் தமிழரசுக் கட்சியின் சிறீதரன் தலைமையிலான பிரசாரக் குழு துடைத்து வழித்து வென்றிருக்கின்றது. தனித்து பிரதேச சபைகளை நிர்வகிக்கும் ஆற்றலை தமிழரசு அங்கு பெற்றுக் கொண்டுள்ளது.

வவுனியாவிலும், மன்னாரிலும் சங்கு சின்னத்தில் போட்டியிட்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி கணிசமான வெற்றிகளைப் பெற்றிருக்கின்றது.

திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் தமிழ்ப் பிரதேச சபைகளை தமிழரசுக் கட்சி வலிமையாகக் கைப்பற்றியுள்ளது.

திருகோணமலை மாநகர சபை, மட்டக்களப்பு மாநகர சபை போன்றவற்றில் ஏனைய தமிழ்க் கட்சிகளின் ஆதரவோடு தமிழரசு நிர்வாகத்தைப் பொறுப்பேற்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மட்டக்களப்பில் தமிழர் தரப்பில் தொடர்புடைய ஒன்பது உள்ளூராட்சி சபைகளில் பட்டிப்பளை பிரதேச சபை தவிர்ந்த ஏனையவற்றில் தமிழரசு பெரும் வெற்றிவாகை சூடியுள்ளது. பட்டிப்பளையில் தமிழரசுக்கு ஐந்து இடங்களும் பிள்ளையானின் கட்சிக்கு மூன்று இடங்களும் சுயேச்சைக் குழுவுக்கு இரண்டு இடங்களும் கிடைத்துள்ளன. சுயேச்சைக் குழு பிள்ளையானின் கட்சியோடு சேர்ந்து இயங்கக்கூடிய நிலைமை இருப்பதாகக் கூறப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்திலும் போட்டியிட்ட பல இடங்களில் தமிழரசுக் கட்சி கணிசமான வெற்றிகளை ஈட்டியிருக்கின்றது.

---

## பாக்.பயங்கரவாதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தியாவின் ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலாப் பயணிகள் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலுக்குப் பாகிஸ்தானைத் தலைமையிடமாகக் கொண்ட லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பின் கிளை அமைப்பான தி ரெசிஸ்டண்ட் பிரண்ட் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து இந்தியா – பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் உருவாகியுள்ளது.

அதேவேளை, பஹல்காம் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கப்படும் என்று இந்தியப் பிரதமர் மோடி, பாதுகாப்புத்துறை மந்திரி ராஜ்நாத் சிங் உள்பட பலரும் தெரிவித்திருந்தனர்.

இதையடுத்து பாகிஸ்தானுக்கு எதிராகப் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை இந்தியா எடுத்தது.

இதற்கிடையே இந்தியப் பிரதமர் மோடி முப்படைத் தளபதிகள் மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஆகியோருடன் முக்கிய ஆலோசனை நடத்தினார்.

மேலும், இந்தியா முழுவதும் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் பாதுகாப்பு ஒத்திகை நடத்த வேண்டும் என மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டது.

இந்நிலையில், இன்று அதிகாலை முதல் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் இந்திய இராணுவம் பயங்கரவாதிகள் தங்கியிருந்த இடங்களைக் குறிவைத்து ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. இதற்கு ஒபரேஷன்

06

# வாக்களிப்பு வீதம் நாடெங்கும் குறைவு

இலங்கையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நேற்று அமைதியாக நடைபெற்ற போதிலும் வாக்களிப்பு வீதம் குறைவடைந்துள்ளது.

நேற்று காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை பொதுமக்கள் தங்களுக்குரிய வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்குகளை சுமுகமாக அளித்தனர்.

எனினும், கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் போல் அல்லாமல் நேற்று நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வாக்களிப்பு வீதம் குறைவடைந்துள்ளது.

பதுளை மாவட்டத்தில் 60 சதவீத வாக்குகளும், கொழும்பு மாவட்டத்தில் 50 சதவீத வாக்குகளும், யாழ்ப்பாண மாவட்டத்தில் 56.6 சதவீத வாக்குகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 61 சதவீத வாக்குகளும், வவுனியா மாவட்டத்தில் 60 சதவீத வாக்குகளும், மன்னார் மாவட்டத்தில் 70 சதவீத வாக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கண்டி மாவட்டத்தில் 55 சதவீத வாக்குகளும், நுவரெலியா மாவட்டத்தில் 60 சதவீத வாக்குகளும், களுத்துறை மாவட்டத்தில் 55 சதவீத வாக்குகளும், அனுராதபுரம் மாவட்டத்தில் 60 சதவீத வாக்குகளும், குருநாகல் மாவட்டத்தில் 51 சதவீத வாக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

புத்தளம் மாவட்டத்தில் 55 சதவீத வாக்குகளும், பொலனறுவை மாவட்டத்தில் 53 சதவீத வாக்குகளும், மொனராகலை மாவட்டத்தில் 61 சதவீத வாக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இரத்தினபுரி மாவட்டத்தில் 60 சதவீத வாக்குகளும், கேகாலை மாவட்டத்தில் 58 சதவீத வாக்குகளும், திருகோணமலை மாவட்டத்தில் 68 சதவீத வாக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும், கம்பஹா மாவட்டத்தில் 56 சதவீத வாக்குகளும், மாத்தறை மாவட்டத்தில் 58 சதவீத வாக்குகளும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 60 சதவீத வாக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## பாக்.பயங்கரவாதி...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சிந்தூர் எனப் பெயரிடப்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் நடவடிக்கையின் போது எல்லையில் பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயற்பட்டு வந்த 9 பயங்கரவாத முகாம்கள் மீது துல்லிய ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் உயிரிழப்பு ஏற்பட்டதா, தாக்குதலில் ஏற்பட்ட பாதிப்பு குறித்த விவரம் இதுவரை தகவல் வெளியாகவில்லை.

இந்த ஏவுகணைத் தாக்குதல் நடவடிக்கையின்போது பாகிஸ்தான் இராணுவக் கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்தப்படவில்லை எனத் தகவல் வெளியாகியுள்ளது. ஒபரேஷன் சிந்தூர் குறித்து இன்று காலை இந்திய மத்திய அரசு அல்லது பாதுகாப்புப் படை தரப்பில் விளக்கம் அளிக்கப்படும் எனவும் கூறப்பட்டது.

## ரவீந்திரனின் கட்டுரை மீண்டும் நாளை தொடக்கம் பிரசுரமாகும்

தேர்தல் பிரசார கால அமைதியை ஒட்டி கடந்த மூன்று தினங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்த "திசைகாட்டியின் திரிசங்கு நிலை அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றில் அரசியல் சந்தர்ப்பவாதமா?" என்ற தலைப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி செல்லத்துரை ரவீந்திரன் எழுதும் கட்டுரைத் தொடர் நாளை முதல் காலை முரசில் பிரசூரமகும் என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்ளவும்.

- ஆசிரியர் -


உ

குருபாதம் துணை

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

இரண்டாவது குரு மகா சன்னிதானம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிகள் சுவாமிகள்

நினைவு பிரார்த்தனை வைபவமும் அஸ்தி பிரதிஷ்டையும்

09.05.2025 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சுவாமிகளின் நினைவு பிரார்த்தனையும், அஸ்தி பிரதிஷ்டையும், மதியம் 12 மணிக்கு அன்னதானமும் நடைபெறும்.

அனைவரையும் கலந்து கொண்டு சுவாமியின் திருவருளை பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.





ஆதீன ஆளுநர் சபை,
நல்லை ஆதீனம், நல்லூர், யாழ்ப்பாணம்

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பாடம் போதித்த மக்கள்

உள்ளூராட்சித் தேர்தல்கள் ஏழு ஆண்டுகளுக்கு பின்னர் நடந்து முடிந்து விட்டது. பெரும்பாலும் எல்லாத் தேர்தல் முடிவுகளும் வெளிவந்துவிட்டன.

நேற்று நள்ளிரவில் முடிவுகள் ஒவ்வொன்றாக வந்து கொண்டிருந்த சமயத்தில் ஆளும் தேசிய மக்கள் சக்திக்கு 'கைக்கு கிடைத்தது வாய்க்கு எட்டவில்லை' என்ற நிலைமைதான் காணப்பட்டது.

ஆறு மாதங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் தரப்புக்கு கிடைத்த மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை என்ற பெருவெற்றி, ஒரு வகையில் குருட்டு அதிர்ஷ்டமோ என்று எண்ணத்தக்க நிலையை இப்போதைய தேர்தல் முடிவுகள் தந்து நிற்கின்றன.

எட்டு மாதங்களுக்கு முன்னர் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் அநுர குமார திஸநாயக்க வெற்றி பெற்றாராயினும், முதல் சுற்று வாக்கு எண்ணிக்கையில் அவரால் வெல்ல முடியவில்லை. ஆக 42 சதவீத வாக்குகளையே அவரால் - அவரது தேசிய மக்கள் சக்தியால் - பெற முடிந்தது.

ஆனால் இரண்டு மாதம் கழிந்து கடந்த நவம்பர் நடுப்பகுதியில் நடந்த பொதுத் தேர்தலில் அவரது கட்சிக்கு அளப்பெரும் வெற்றி கிடைத்தது. தனித்து ஒரு கட்சி நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டிலும் விட அதிக பெரும்பான்மை வலுவைப் பெறும் சாதனை வாய்ப்பு அவருக்குக் கிட்டியது.

ஆனால் அடுத்த ஆறு மாதத்தில் - நேற்று - நடந்து முடிந்த உள்ளூராட்சி தேர்தல் அவரது ஆளுந்தரப்புக்கு பெரும் பின்னடைவை தந்திருப்பது கண்கூடு.

நாட்டில் தேர்தல் நடந்த 339 உள்ளூராட்சி சபைகளில் பெரும்பான்மை சபைகளில் அவரது கட்சிக்கு வட்டாரங்களில் அதிக வெற்றி கிடைத்தாலும் அனேகமாக எல்லா சபைகளிலும் தனித்து ஆட்சி அமைக்கும் வாய்ப்பை அவரது கட்சி இழந்து நிற்கின்றது. நாடாளுமன்றத்தில் முழு அதிகாரத்தையும், நிறைவேற்ற அதிகார ஜனாதிபதி பதவியையும் ஒருங்குசேர வைத்திருக்கும் தேசிய மக்கள் சக்திக்கு எதிராக எதிர்க்கட்சிகள் அனைத்தும் இயல்பாகவே தமக்குள் ஒன்றுபடும் காரணம் இருப்பதனால், பெரும்பாலான சபைகள் அனைத்தையும் எதிரணிகள் ஒன்றுபட்டு நிர்வாகத்தை கைப்பற்றும் நிலையே வந்திருக்கிறது. நாடாளுமன்றின் ஆளும் தரப்பு, உள்ளூராட்சிசபைகள்பெரும்பாலானவற்றில் எதிரணியில் அமரும் பரிதாபம் நேர்ந்திருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திசநாயக்கவுக்கு பாடம் போதித்த வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் - குறிப்பாக வடக்கு மக்கள் - நாடாளுமன்றத் தேர்தலில் அவரது கட்சிக்கு கணிசமான ஆதரவை நல்கினர்.

அந்த ஆதரவை தக்க வைக்கும் அணுகுமுறையை விடுத்து, தமிழர் விவகாரத்தில் அவரது கட்சி நடந்து கொண்ட திமிர்த்தனமான போக்கு, இந்த உள்ளூராட்சித் தேர்தலில் நல்ல பாடத்தை அவருக்குப் போதித்திருக்கின்றது.

வடக்கில் ஓரிரு இடங்களைத் தவிர மற்ற இடங்களில் நிர்வாகத்தை அமைக்கும் முயற்சியைக் கூட எட்டுவதற்கான வாய்ப்பை தமிழ் மக்கள், தேசிய மக்கள் சக்திக்கு வழங்கவில்லை. தமிழ் தேசியத்தை தமிழர்கள் கைவிட மாட்டார்கள் என்று தெளிவான பாடம் இந்தத் தேர்தலின் மூலம் அநுராவிற்கும் அவரது அணியினருக்கும் உணர்த்தப்பட்டிருக்கின்றது.

வடக்கில் போஸ்டர்களில் குறிப்பிட்டது போல கோமாளி உறுப்பினர்கள், ரவுடி அமைச்சர்கள், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து திமிர்த்தனமாக பேசும் பிமல் ரத்நாயக்கா போன்ற தலைவர்கள் புண்ணியத்தில் இந்தத் தேர்தலில் தமிழ் தேசியம் திசைகாட்டியிடம் சரணாகதி அடையாமல் வெளியே வந்து தன்னை நிலை நிறுத்திக் கொண்டுள்ளது.

தமிழ் கட்சிகள் தங்களுக்குள் முரண்பட்டு நின்றாலும் - பிரிந்து நின்று தேர்தலை எதிர்கொண்டாலும் - தமிழ் தேசியத்துக்கு மாறான தடிப்பான நிலைப்பாட்டை எடுத்த 'அநுரா அண்ட் கோ' வுக்கு முறையான பதிலடி கொடுத்திருக்கிறார்கள்.

இனியாவது தமிழர் விவகாரத்தை அந்த தேசிய இனத்துக்கும் அந்த தேச மக்களுக்கும் உரிய மரியாதை கொடுக்கும் விதத்தில் தேசிய மக்கள் சக்தி அணுக வேண்டும். அதற்குரிய விதத்தில் விடயங்களைக் கையாள அந்தக் கட்சி முன் வர வேண்டும்.

# யாழ்ப்பாணம் மாவட்டம்

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 9,881 | 11 |
| தேசிய மக்கள் சக்தி | 7,908 | 9 |
| தமிழ்க் காங்கிரஸ் | 5,047 | 5 |
| ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி | 4,543 | 5 |
| சுயேச்சைக் குழு 01 | 1,910 | 2 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 1,662 | 2 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 946 | 1 |
| சுயேச்சைக் குழு 02 | 531 | 1 |

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 6,896 | 8 |
| தேசிய மக்கள் சக்தி | 5,424 | 6 |
| ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி | 4,159 | 5 |
| தமிழ்க் காங்கிரஸ் | 3,732 | 4 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 1,843 | 2 |
| ஈழ மக்கள் ஜனநாயக கட்சி | 1,675 | 2 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 917 | 1 |

## வேலணை பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 2,673 | 8 |
| தேசிய மக்கள் சக்தி | 1,840 | 4 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 1,313 | 3 |
| தமிழ்க் காங்கிரஸ் | 976 | 2 |
| சுயேச்சைக் குழு 1 | 492 | 1 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 450 | 1 |
| சுயேச்சைச் குழு 2 | 318 | 1 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 314 | 1 |
| சுயேச்சைக் குழு 3 | 198 | 1 |

## யாழ்ப்பாணம் மாநகர சபை

| | | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 10,370 | 13 |
| தமிழ்க் காங்கிரஸ் | 9,124 | 12 |
| தேசிய மக்கள் சக்தி | 7,702 | 10 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 3,567 | 4 |
| ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி | 3,076 | 4 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 587 | 1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 464 | 1 |

## சாவகச்சேரி நகர சபை

| | | |
|---|---|---|
| தமிழ்க் காங்கிரஸ் | 2,959 | 6 |
| தமிழரசுக் கட்சி | 2,594 | 6 |
| தேசிய மக்கள் சக்தி | 1,445 | 3 |
| ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி | 738 | 2 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 535 | 1 |

## வல்வெட்டித்துறை நகர சபை

| | | |
|---|---|---|
| தமிழ்க் காங்கிரஸ் | 1,558 | 7 |
| தமிழரசுக் கட்சி | 1,299 | 5 |
| தேசிய மக்கள் சக்தி | 676 | 3 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 90 | 1 |

## நெடுந்தீவு பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 974 | 6 |
| ஈழ மக்கள் ஜனநாயக கட்சி | 752 | 4 |
| தேசிய மக்கள் சக்தி | 412 | 2 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 158 | 1 |

## வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 6,995 | 13 |
| தமிழ்க் காங்கிரஸ் | 4,255 | 7 |
| தேசிய மக்கள் சக்தி | 3,329 | 6 |
| ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி | 2,512 | 4 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 1,165 | 2 |

# முல்லைத்தீவு மாவட்டம்

## துணுக்காய் பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 1,594 | 4 |
| தமிழ்க் காங்கிரஸ் | 1,082 | 2 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 804 | 2 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 605 | 1 |
| தேசிய மக்கள் சக்தி | 492 | 1 |
| சிறிலங்கா தொழிலாளர் கட்சி | 254 | 1 |
| சுயேச்சை | 388 | 1 |

## மாந்தை கிழக்கு பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 1,364 | 4 |
| தமிழ்க் காங்கிரஸ் | 808 | 2 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 500 | 2 |
| ஐக்கிய மக்கள் சக்தி. | 990 | 3 |
| தேசிய மக்கள் சக்தி | 607 | 2 |

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 10,816 | 11 |
| தேசிய மக்கள் சக்தி | 4,028 | 4 |
| ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி | 2,652 | 2 |
| சுயேச்சைக் குழு | 2,491 | 2 |
| தமிழ்க் காங்கிரஸ் | 1,174 | 1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,026 | 1 |
| இலங்கைத் தொழிலாளர் கட்சி | 658 | 1 |

## கரைதுறைப்பற்று பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 6,306 | 7 |
| தேசிய மக்கள் சக்தி | 4,407 | 5 |
| ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி | 3,672 | 4 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,962 | 2 |
| சுயேச்சைக் குழு 2 | | 1 |
| இலங்கைத் தொழிலாளர் கட்சி | 624 | 1 |
| ஐக்கிய தேசியக் கூட்டணி | 548 | 1 |

# கிளிநொச்சி மாவட்டம்

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 3,040 | 6 |
| ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி | 1,511 | 3 |
| தேசிய மக்கள் சக்தி | 1,349 | 3 |
| தமிழ்க் காங்கிரஸ் | 508 | 1 |

## பூநகரி பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 5,171 | 10 |
| ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி | 2,355 | 3 |
| தேசிய மக்கள் சக்தி | 1,884 | 3 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 971 | 1 |
| சுயேச்சைக் குழு 01 | 632 | 1 |
| சுயேச்சைக் குழு 02 | 486 | 1 |
| தமிழ்க் காங்கிரஸ் | 325 | 1 |

## கரைச்சி பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 20,962 | 20 |
| தேசிய மக்கள் சக்தி | 7,319 | 6 |
| ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி | 5,058 | 4 |
| தமிழ்க் காங்கிரஸ் | 2,712 | 2 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 2,195 | 2 |
| சுயேச்சைக் குழு | 1,664 | 2 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 493 | 1 |

# மட்டக்களப்பு மாவட்டம்

## கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐக்கிய மக்கள் சக்தி | 5,968 | 8 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 5,455 | 6 |
| தேசிய மக்கள் சக்தி | 1,775 | 2 |
| சுயேச்சைக் குழு | 556 | 1 |
| தமிழரசுக் கட்சி | 536 | 1 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 341 | 1 |

## மண்முனைமேற்கு பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 7,400 | 10 |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 2,630 | 3 |
| தேசிய மக்கள் சக்தி | 2,497 | 3 |
| ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி | 1,217 | 1 |
| தமிழ்க் காங்கிரஸ் | 1,002 | 1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 963 | 1 |

# திருகோணமலை மாவட்டம்

## வெருகல் பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 4,307 | 8 |
| தேசிய மக்கள் சக்தி | 1,712 | 3 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 830 | 2 |

## தம்பலகாமம் பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 3,580 | 3 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 3,433 | 3 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 2,690 | 2 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 2,094 | 2 |
| இலங்கைத் தமிழரசுக் கட்சி | 1,691 | 2 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 1,042 | 1 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 659 | 1 |
| தமிழ்க் காங்கிரஸ் | 641 | 1 |
| பொதுஜன ஐக்கிய முன்னணி | 631 | 1 |

## கிண்ணியா பிரதேச சபை

| | | |
|---|---|---|
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 5,941 | 5 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 3,700 | 3 |
| தேசிய மக்கள் சக்தி | 3,335 | 2 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 2,407 | 2 |
| தேசிய காங்கிரஸ் | 1,029 | 1 |
| நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி | 808 | 1 |

## மொரவெவ பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 2,663 | 9 |
| பொதுஜன பெரமுன | 1,060 | 3 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 847 | 3 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 427 | 1 |
| தமிழரசுக் கட்சி | 212 | 1 |

## சேருவில பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 3,439 | 7 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,344 | 3 |
| தமிழ்ரசுக் கட்சி | 704 | 1 |
| தமிழ்க் காங்கிரஸ் | 681 | 1 |
| பொதுஜன பெரமுன | 543 | 1 |
| சர்வஜன அதிகாரம் | 540 | 1 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 409 | 1 |
| மக்கள் போராட்ட முன்னணி | 375 | 1 |

## மூதூர் பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 5,926 | 5 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 6,970 | 4 |
| தேசிய மக்கள் சக்தி | 5,151 | 3 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 4,704 | 3 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 3,771 | 2 |
| ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி | 3,036 | 2 |
| தேசிய காங்கிரஸ் | 1,509 | 1 |
| நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி | 1,304 | 1 |
| சுயேச்சைக் குழு | 1,279 | 1 |

# அம்பாறை மாவட்டம்

## நாவிதன்வெளி பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | - 4,154 - 5 |
| சுயேச்சைக் குழு 04 | - 2,175 - 2 |
| சுயேச்சைக் குழு 01 | - 1,351 - 2 |
| சுயேச்சைக் குழு 03 | - 1,085 - 1 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - 1,075 - 1 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | - 1,004 - 1 |
| தேசிய மக்கள் சக்தி | - 940 - 1 |

## ஆலையடிவேம்பு பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | - 5,122 - 7 |
| தேசிய மக்கள் சக்தி | - 5,070 - 7 |
| சுயேச்சைக் குழு | - 1,800 - 2 |

## திருக்கோவில் பிரதேச சபை

| | |
|---|---|
| சுயேச்சைக் குழு 1 | - 7,829 - 8 |
| தமிழரசுக் கட்சி | - 5,666 - 6 |
| தேசிய மக்கள் சக்தி - | 1,068 - 1 |
| சுயேச்சைக் குழு 2 | - 504 - 1 |

# மன்னார் மாவட்டம்

## மன்னார் பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | - 2,577 - 5 |
| ஐக்கிய மக்கள் சக்தி | - 3,520 - 4 |
| ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி | - 3,400 - 4 |
| தேசிய மக்கள் சக்தி | - 2,944 - 3 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - 2,124 - 2 |
| இலங்கைத் தொழிலாளர் கட்சி | - 1,450 - 2 |
| தமிழ்க் காங்கிரஸ் | - 646 - 1 |
| சுயேச்சைக் குழு | - 568 - 1 |

## மாந்தை மேற்கு பிரதேச சபை

தமிழரசுக் கட்சி - 3,218 - 5
ஐக்கிய மக்கள் சக்தி - 2,842 - 4
ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி - 2,792 - 4
தேசிய மக்கள் சக்தி - 2,416 - 4
இலங்கைத் தொழிலாளர் கட்சி - 1,330 - 2
தமிழ்க் காங்கிரஸ் - 700 - 1
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 492 - 1

## முசலி பிரதேச சபை

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சக்தி | - 3,767 - 5 |
| இலங்கைத் தொழிலாளர் கட்சி | - 2,441 - 4 |
| தேசிய மக்கள் சக்தி | - 2,132 - 3 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - 1,482 - 2 |
| சுயேச்சைக் குழு | - 611 - 1 |
| ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி | - 551 - 1 |

## மன்னார் நகர சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | - 2,255 - 4 |
| தேசிய மக்கள் சக்தி | - 2,123 - 3 |
| ஐக்கிய மக்கள் சக்தி | - 1,943 - 3 |
| ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி | - 1,807 - 2 |
| தமிழ் மக்கள் கூட்டணி | - 1,439 - 2 |
| இலங்கைத் தொழிலாளர் கட்சி | - 584 - 1 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 535 - 1 |




# தமிழ்நாட்டின் வளர்ச்சியை பாராட்டுங்கள்: ஊடகத்துறையினரிடம் முதல்வர் கோரிக்கை





"தனிப்பட்ட ஸ்டாலினையோ, தி.மு.க. அரசையோ நீங்கள் பாராட்ட வேண்டும் என்று நான் கேட்கவில்லை. தமிழ்நாட்டை பாராட்டுங்கள் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டின் வளர்ச்சியையும், தனித்துவத்தையும் மக்களிடம் எடுத்துச் சொல்லுங்கள். உங்கள் துணையோடு தமிழ்நாட்டை நிச்சயம் வளர்த்தெடுக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது,"

- இவ்வாறு சென்னையில் நடந்த பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகத் துறையினர் உடனான சந்திப்பில் முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற பத்திரிகையாளர்கள், ஊடகத்துறையினர் சந்திப்பு நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றுகையில்,

"நீங்கள் நேர்மையாகவும், ஆக்கப்பூர்வமான அணுகுமுறையோடும் செயல்பட்டதால்தான் அரசின் சாதனைகள் மக்கள் மனதில் நிலைத்திருக்கிறது. இதற்காக நான் எத்தனை முறை உங்களுக்கு நன்றி சொன்னாலும் தகும். அரசின் செய்தி அறிக்கையை வெளியிடுவது, நேரலை செய்வது என்று மட்டுமல்லாமல், திட்டங்களின் நோக்கத்தை விளக்குவது, திட்டங்களால் பயன்பெற்றவர்களின் பேட்டிகளை பதிவு செய்து வெளியிடுவது என்று நம்முடைய அரசின் செயல்பாடுகளை விரிவாக கொண்டு சேர்த்திருக்கிறீர்கள்.

என்னைப் பொறுத்தவரைக்கும், விமர்சனங்களை முன்வைத்தால், அதனை ஆக்கபூர்வமாக நான் ஏற்றுக் கொள்கிறவன். ஆலோசனைகள் இருந்தால், அதை உடனடியாக செயல்படுத்த உத்தரவிட்டிருக்கிறேன். உங்களுக்கு என்னுடைய அன்பான வேண்டுகோள் என்ன என்றால், இந்தியாவிற்கே முன்மாதிரியாக பல திட்டங்களைச் செயல்படுத்திக்கொண்டு இருக்கிறோம். நம்முடைய திட்டங்களை பார்த்து, பல்வேறு மாநில அரசுகள் அந்த திட்டங்களை அவர்கள் மாநிலங்களிலும் செயல்படுத்துகிறார்கள்.

அப்படிப்பட்ட திட்டங்களை, நீங்கள் மனப்பூர்வமாக பாராட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விமர்சிக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. என்னுடைய அறுபது ஆண்டுகால அரசியல் வாழ்க்கையே விமர்சனங்களால் செதுக்கப்பட்டிருப்பது. உங்களுக்கு தெரியும். எனவே, நம்முடைய அரசின் திட்டங்களை இன்னும் செம்மைப்படுத்துவதற்கான கருத்துகள், ஆலோசனைகள் இருந்தால் நீங்கள் எடுத்துச் சொல்லுங்கள், அந்த திட்டங்களை இன்னும் சிறப்பாக செயல்படுத்துவோம். எல்லோருடைய கருத்துகளையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதில் நான் கவனமாக இருக்கிறேன்.

ஆனால், சில ஊடகங்கள் விமர்சிப்பதில் காட்டும் ஆர்வத்தை, நல்ல திட்டங்களை பாராட்டுவதில் அதிக கவனம் செலுத்துவது இல்லை. எல்லோரையும் சொல்லவில்லை. பாராட்டுவதில் மட்டும் மென்மையான போக்கைத்தான் கடைப்பிடிக்கிறார்கள். அது ஏன் என்று தெரியவில்லை? பாராட்ட வேண்டியதை பாராட்டினால் தான், விமர்சனத்திற்கான மரியாதையும் மதிப்பும் கிடைக்கும். எனவே, தயாங்காமல் விமர்சிப்பது போன்று, தயங்காமல் பாராட்டுங்கள் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சந்திப்பில், உங்களின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் கேட்க வேண்டும் என்று நினைக்கிறேன். அதற்காகதான் இந்த கூட்டத்தை கூட்டியிருக்கிறோம். தமிழ்நாட்டின் எதிர்காலத்தை மேலும் வலுப்படுத்த, உங்களுடைய ஆழமான, பரந்துபட்ட பார்வையும், அனுபவமும் எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக நிச்சயமாக இருக்கும். சமத்துவம், சமூகநீதி, சமதர்மம் , சகோதரத்துவம், மதச்சார்பின்மை, மொழிப்பற்று, இன உரிமை, மாநில சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி ஆகிய அரசியல் பண்பாடுகளைக் கொண்ட மண், நம்முடைய தமிழ்நாடு. இந்த இலட்சியங்களை அடையும் பயணத்தில் நாங்கள் இருக்கிறோம். இந்தப் பயணத்தில், ஊடகங்களான உங்களின் பங்கு மிகவும் முக்கியமானது.

எனவே, தனிப்பட்ட ஸ்டாலினையோ, தி.மு.க. அரசையோ நீங்கள் பாராட்ட வேண்டும் என்று நான் கேட்கவில்லை. தமிழ்நாட்டை பாராட்டுங்கள் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டின் வளர்ச்சியையும், தனித்துவத்தையும் மக்களிடம் எடுத்துச் சொல்லுங்கள். உங்கள் துணையோடு தமிழ்நாட்டை நிச்சயம் வளர்த்தெடுக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது," என்றார்.

# இந்தியாவில் இன்று பாதுகாப்பு ஒத்திகை!



இந்தியாவில் 259 இடங்களில் இன்று நாடு தழுவிய பாதுகாப்பு தயார்நிலை பயிற்சி இடம்பெறவுள்ளது.

விமானத் தாக்குதல் சைரன்கள் மற்றும் மின்தடை போன்ற சூழ்நிலைகளுக்கு ஏற்ற பயிற்சி இந்த நடவடிக்கை முதன்மை பெறுகின்றது.

ஏப்ரல் 22 ஆம் திகதி பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே பதற்றம் அதிகமாக இருப்பதால் இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது.

1971 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடத்தப்படும் இதுபோன்ற முதல் பயிற்சி இதுவாகும்.

மே 7 ஆம் திகதி திட்டமிடப்பட்ட நாடு தழுவிய மாதிரிப் பயிற்சிக்கு முன்னதாக, நாடு முழுவதும் சிவில் பாதுகாப்பு தயார்நிலையை மதிப்பிடுவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் நேற்று உள்துறைச் செயலாளர் கோவிந்த் மோகன் ஒரு முக்கியமான கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

இந்தக் கூட்டத்தில் பல்வேறு மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் சிவில் பாதுகாப்புத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த பாதுகாப்பு ஒத்திகையின்போது 2010 இல் அறிவிக்கப்பட்ட 244 நியமிக்கப்பட்ட சிவில் பாதுகாப்பு மாவட்டங்கள் மீது சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது.

# இந்தியா - பிரித்தானியா இடையே வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்து

இந்தியா - பிரித்தானியா இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மற்றும் இரட்டை பங்களிப்பு மாநாடு முடிவு இறுதி செய்யப்பட்டு கையெழுத்தாகியுள்ளது.

இதனை இந்திய பிரதமர் மோடியும், பிரித்தானிய பிரதமர் பிஸ்டார்மரும் ஒருமித்து வரவேற்றனர். இந்த ஒப்பந்தங்கள் இரு நாடுகளுக்கு இடையே வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை வளர்க்கும்; புதுமை கண்டுபிடிப்பு மற்றும் வேலைவாய்ப்பு அதிகரிப்புக்கு ஊக்கமளிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இந்திய பிரதமர் அலுவலகம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

"பிரதமர் நரேந்திர மோடியும், பிரித்தானிய பிரதமர் கீர் ஸ்டார்மருமு நேற்று தொலைபேசி வாயிலாக உரையாடினர்கள். இரட்டை பங்களிப்பு மாநாட்டுடன் ஒரு லட்சிய மற்றும் பரஸ்பர நன்மை பயக்கும் இந்தியா - பிரித்தானியா இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தின் வெற்றிகரமான முடிவை இரு தலைவர்களும் வரவேற்றனர்.

இரு நாட்டுப் பொருளாதாரங்களிலும் வர்த்தகம், முதலீடு, புதுமை கண்டுபிடிப்பு மற்றும் வேலைவாய்ப்பை அதிகரிக்கும். இருதரப்பு விரிவான உத்திசார்ந்த கூட்டாண்மையில் இது ஒரு வரலாற்று மைல்கல்



என்று தலைவர்கள் விவரித்தனர். உலகின் இரண்டு பெரிய மற்றும் வெளிப்படையான சந்தை பொருளாதாரங்களுக்கு இடையிலான மைல்கல் ஒப்பந்தங்கள் வணிகங்களுக்கு புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தும் என்றும், பொருளாதார இணைப்புகளை வலுப்படுத்தும் என்றும் மக்களிடையே உறவுகளை மேம்படுத்தும் என்று இருவரும் ஒப்புக்கொண்டனர்.

இது உலகெங்கிலும் உள்ள பொருளாதாரங்களுடன் கூட்டணிகளை வலுப்படுத்துவதும், வர்த்தக தடைகளைக் களைவதும் வலுவான மற்றும் பாதுகாப்பான பொருளாதாரத்தை வழங்குவதற்கான மாற்றத்துக்கான திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்று பிரித்தானிய பிரதமர் ஸ்டார்மர் கூறினார். இந்தியாவுக்கும், பிரித்தானியாவுக்கு இடையிலான பொருளாதார மற்றும் வணிக உறவுகளை விரிவுபடுத்துவது அதிகரித்து வரும் வலுவான மற்றும் பன்முகத்தன்மை கொண்ட கூட்டாண்மைக்கு ஒரு முக்கிய அம்சமாக இது உள்ளது என்று இரு தலைவர்களும் ஒப்புக் கொண்டனர்.

பொருள்கள் மற்றும் சேவைகளில் வர்த்தகத்தை உள்ளடக்கிய ஒரு சமநிலையான, சமமான மற்றும் லட்சியமான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தின் முடிவு, இருதரப்பு வர்த்தகத்தை கணிசமாக மேம்படுத்தும். வேலைவாய்ப்புக்கான புதிய வழிமுறைகளை உருவாக்கும். வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் மற்றும் இரு நாடுகளிலும் உள்ள குடிமக்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது, இரு நாடுகளும் உலகளாவிய சந்தைகளுக்கான தயாரிப்புகள் மற்றும் சேவைகளை கூட்டாக உருவாக்குவதற்கான புதிய ஆற்றலையும் உருவாக்கும். இந்த ஒப்பந்தம் இந்தியா - பிரித்தானியா இடையேயான விரிவான உத்தி சார்ந்த கூட்டாண்மையின் வலுவான அடித்தளத்தை உறுதிப்படுத்துகிறது. மேலும் ஒத்துழைப்பு மற்றும் செழிப்புக்கான புதிய சகாப்தத்திற்கு வழி வகுக்கிறது.

பிரித்தானிய பிரதமர் ஸ்டார்மரை இந்தியாவுக்கு வருகை தருமாறு பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார். இரு தலைவர்களும் தொடர்ந்து தொடர்புகொள்ள ஒப்புக்கொண்டனர்." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# தீவிரவாதத்துக்கு எதிரான போரில் இந்தியாவுக்கு ரஷ்யா முழு ஆதரவு

தீவிரவாதத்துக்கு எதிரான போரில் இந்தியாவுக்கு ரஷ்யா முழு ஆதரவு அளிக்கும் என்று பிரதமர் நரேந்திர மோடியிடம் ஜனாதிபதி விளாடிமிர் புடின் வாக்குறுதி அளித்துள்ளார்.

கடந்த 22 ஆம் திகதி காஷ்மீரின் பஹல்காமில் நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதலுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அன்றைய தினமே கடும் கண்டனம் தெரிவித்தார். அப்போது அவர் கூறும்போது, "பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த தாக்குதலை நடத்திய தீவிரவாதிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். இந்தியாவுக்கு ரஷ்யா எப்போதும் பக்கபலமாக இருக்கும்" என்று தெரிவித்தார்.

இந்த சூழலில் பிரதமர் நரேந்திர மோடியுடன் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் நேற்று முன்தினம் தொலைபேசியில் ஆலோசனை நடத்தினார். இதுகுறித்து மத்திய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ரன்தீர் ஜெய்ஸ்வால் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில்,

"பிரதமர் நரேந்திர மோடியை ரஷ்ய ஜனாதிபதி புடின் தொலை



பேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஜனாதிபதி புடின் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்தார். தீவிரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் போருக்கு ரஷ்யா முழு ஆதரவு அளிக்கும் என்று அவர் வாக்குறுதி அளித்தார். தீவிரவாத தாக்குதலில் தொடர்புடையவர்கள், அதன் பின்னணியில் இருப்பவர்களை நீதியின் முன்பு நிறுத்த வேண்டும் என்று புடின் வலியுறுத்தினார்." என்று குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி மாளிகை வெளியிட்ட அறிக்கையில்,

" ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினும் இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் தொலைபேசியில் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, இரண்டாம் உலகப்போரில் ரஷ்யா வெற்றி பெற்றதன் 80 ஆவது ஆண்டு தினத்துக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்தார்.

நடப்பாண்டில் இந்தியா, ரஷ்யா உச்சி மாநாடு நடத்தப்பட உள்ளது. இந்தியாவில் நடைபெற உள்ள இந்த மாநாட்டில் பங்கேற்க ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார். இந்த அழைப்பை ஜனாதிபதி புடின் ஏற்றுக் கொண்டார்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 22.04.2025




இன்று சற்று மந்தமான நாள். இன்று சிறிது குழப்பத்துடன் காணப்படுவீர்கள். நெருங்கிய நண்பர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. இசை கேட்பது மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சகளில் கலந்து கொள்வது ஆறுதலை அளிக்கும்.

பணிகளில் இன்று மனநிறைவு காணப்படாது. உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று குழப்பமான மனநிலை காணப்படும். இந்த உணர்வை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். எனவே உங்கள் துணையிடம் அமைதியான முறையில் நடந்து கொள்வதும் மகிழ்ச்சியாக இருப்பதும் சிறந்தது.

இன்று நிதிநிலைமை அனுகூலமாக இருக்காது.




இன்று வளர்ச்சி காணப்படும் நாள். சிறிதளவு முயற்சியில் அதிக வெற்றி காண்பீர்கள். இன்று நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

கடினமான பணிகளைக் கூடஎளிதாக ஆற்றுவீர்கள். உங்கள் உறுதி மற்றும் பொறுப்பு காரணமாக பணிகள் சுமூகமாக நடக்கும். திட்டமிடுவதன் மூலம் இது சாத்தியம்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பாக நடந்துகொள்வீர்கள். உங்கள் துணையை நட்கு புரிந்துகொண்டு நடந்து கொள்வீர்கள்.

பங்கு வர்த்தகம் மூலம் பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. எதிர்பாராத பண வரவுகள் இன்று சாத்தியம்.

என்னுடைய ஆரோக்கியம் சிறப்பாக உள்ளது .என்னும் உங்கள் நம்பிக்கையே இன்று உங்கள் ஆரோக்கியத்தை பராமரிக்க உதவும்.




சுய முயற்சியில் நல்ல பலன்களைக் காண்பீர்கள். இன்று காணப்படும் மகிழ்ச்சியும் திருப்தியும் உங்கள் முன்னேற்றத்துக்கு வழி வகுக்கும்.

பணி வளர்ச்சி ஸ்திரமாக இருக்கும். உங்களுக்கு கூடுதல் பொறுப்புகள் வழங்கப்படும். நம்பிக்கையுடன் அதனை எற்றுக் கொள்ளுங்கள்.

நீங்கள் நகைச்சுவை உணர்வுடன் இருப்பீர்கள். எனவே செயல்கள் யாவும் சுமூகமாக நடக்கும். உங்கள் துணையும் உங்கள் அன்பை புரிந்துகொண்டு நடப்பார். இதனால் உறவில் திருப்தி நிலவும்.

இன்று உங்களிடம் கணிசமான தொகை காணப்படும். அந்தப் பணம் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு போதுமானதாக இருக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். யோகா அல்லது தியானம் மேற்கொள்வது சிறந்தது.




நல்ல சிந்தனை மூலம் சிறப்பான செயல்களுக்கு முயற்சி செய்வீர்கள். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும் சக பணியாளர்களுடன் சிறந்த முறையில் கலந்து பழகுவதன் மூலம் புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ள இயலும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் தகவல் பரிமாற்றத்தில் இடைவெளி காணப்படும். இதனால் இருவருக்கும் இடையிலான புரிந்துணர்வு பாதிப்படையும். எனவே இதனை தவிர்க்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணம் சம்பாதிப்பது கடினமாக காணப்படும். சிறந்த முறையில் திட்டமிடுவது உதவிகரமாக இருக்கும்.

உங்கள் கண்களில் கவனம் செலுத்த வேண்டும்.




சில சமயங்களில் அமைதியின்மையை உணர்ந்தாலும் அறிவார்ந்த செயல்களை செய்யுங்கள். பொறுமையான அணுகுமுறை மேற்கொண்டால் சிறந்தது.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது கவனமாக இருக்க வேண்டும். உங்கள் மேலதிகாரிகளுடன் சில விரும்பத்தகாத தருணங்களை சந்திக்க நேரும்.சில குடும்ப பிரச்சினை காரணமாக உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே கருத்து வேறுபாடு காணப்படும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் இருவரும் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள்.ஆரோக்கியம் சுமாராக இருக்கும். கால் வலி மற்றும் விறைப்புத் தன்மை உங்களுக்கு கவலையை அளிக்கும்.




உங்கள் முயற்சியில் வெற்றி கிடைக்கும். நீங்கள் உங்கள் நடவடிக்கைகளை எளிதாக மேற்கொள்வீர்கள். இன்று அதிர்ஷ்டம் காணப்படும்.

பணியிடத்தில் நல்ல பலன்கள் காணப்படும். மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவித்து மகிழலாம்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். இந்த நேரத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு பயனுள்ள முதலீடுகளை செய்யுங்கள்.

ஆரோக்கியம் சிறந்த முறையில் இருக்கும்.




பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு மன ஆறுதலை அளிக்கும். விவேகமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பணிநிமித்தமான பயணம் காணப்படுகின்றது. சிறந்த திட்டமிடல் மூலம் ஆக்கபூர்வமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள துணையிடம் வன்மையாக நடந்து கொள்வீர்கள். நல்லுறவை பராமரிக்க அத்தகைய வன்மை உணர்வை தவிர்ப்பது நல்லது.

பண வரவு சுமாராக இருக்கும். கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். செலவுகளை கட்டுபடுத்த வேண்டும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தோள்கள் மற்றும் கணுக்கால்களில் வலி ஏற்படலாம். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




இன்று உறுதியுடன் இருக்க வேண்டிய நாள். நீங்கள் எடுக்கும் எந்த நடவடிக்கையையும் கவனமாக ஆற்றினால் வெற்றி நிச்சயம்.

பணியிடத்தில் சில விரும்பத்தகாத தருணங்கள் காணப்படும். சக பணியாளர்களுடன் அனுசரித்து செல்வதன் மூலம் நல்ல பலன்கள் கிடைக்கும்.

நீங்கள் இன்று அமைதியிழந்து உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள். எனவே இதனை தவிர்த்து அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நீங்கள் பணத்தை இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாளவும்.

தோல் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஒவ்வாமை ஏற்படுத்தும் உணவுகளை உட்கொள்ள வேண்டாம். மன உளைச்சலுக்கு இடம் அளிக்காதீர்கள்

# இன்றைய ராசி பலன்கள் - 07.05.2025




ஆன்மீக ஈடுபாடு நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். இதுவே உங்களின் எதிர்கால போக்காக ஆகிவிடும்.

உங்கள் வளர்ச்சியில் தடைகளை ஏற்படுத்தும் சில தருணங்களைக் காண்பீர்கள். எனவே முன் ஜாக்கிரதையாக விழிப்புடன் அதனை எதிர்கொள்ள தயாராகுங்கள்.

உங்கள் துணையிடம் தேவையின்றி உணர்ச்சி வசப்படுவீர்கள். எனவே உங்களின் இந்தப் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியம்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். செலவுகளை கட்டுபடுத்தும் வகைகளை கண்டறிய முயல வேண்டும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். உங்கள் பதட்டங்களை கட்டுப்படுத்தினால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




நீங்கள் எந்த விஷயத்தையும் இன்று எளிதாக எடுத்துக் கொண்டு வெற்றி காண்பீர்கள். உங்கள் விருப்பங்கள் எளிதில் நிறைவேறும்.

பணியிடத்தில் முன்னணியில் இருப்பீர்கள். உங்கள் முயற்சிக்குப் பாராட்டு கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் நீங்கள் மற்ற ஜோடிகளுக்கு உதாரணமாக திகழ்வீர்கள்.

எதிர்பாராத பண வரவு காணப்படும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். கவனமாக திட்டமிட வேண்டும்.

இன்று பெரிய அளவில் ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது. உடற்பயிற்சி மேற்கொண்டால் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்துக் கொள்ளலாம்.




இன்றைய நாள் உற்சாகமான மகிழ்ச்சியான நாளாக இருக்கும்.எனவே மகிழ்ச்சியுடன் இன்றைய நாளை பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

பணியில் முன்னேற்றங்கள் காணப்படும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

குடும்பத்தை அனுசரித்துப் போவதன் மூலம் இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்கலாம். மகிழ்ச்சியுடன் இருக்கலாம்.

இன்று உங்கள் சேமிப்பின் மூலம் பண வரவு காணப்படும். சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

நீங்கள் உங்களை வருத்திக் கொள்ளாத வரையில் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். சிந்திப்பதை நிறுத்தி விட்டு செயல்களில் ஈடுபடுங்கள்.




இன்று நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் உங்கள் செயல்களை ஆற்ற வேண்டும். சுலோகம் சொல்வது மற்றும் தியானம் மேற்கொள்வதன் மூலம் இது சாத்தியம்.

பணியிடத்தில் வளர்ச்சி சுமூகமாக இருக்காது. அதிகமான பணிகள் உங்களுக்கு கடினமாக இருக்கும்.

குடும்ப பிரச்சினை காரணமாக அமைதியின்மை காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். எனவே ஒன்றாக அமர்ந்து பேசி பிரச்சினையை தீர்த்துக் கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை ஏற்ற இறக்கங்களுடன் கானபப்படும். பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தோள் வலி மற்றும் முதுகு வலி காரணமாக பதற்றம் ஏற்படலாம்.


# முன்னாள் ஜனாதிபதி ரணில் நாளை இந்தியா செல்கிறார்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரண்டு நாள்கள் விஜயம் மேற்கொண்டு நாளை வியாழக் கிழமை இந்தியா செல்லவுள் ளார்.

கடந்த ஆண்டு செப்டெம்பரில் ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்வது இது நான்காவது சந்தர்ப்பமாகும்.

இந்தியாவின் கர்நாடகா மாநிலத்தில் பெங்களூரில், தி இந்து செய்தித்தாளின் ஐந்தாவது பதிப்பு தொடர்பாக நடைபெறும் விழாவில், சிறப்புரையாற்ற ரணில் விக்கிரமசிங்க அழைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் கர்நாடக முதலமைச்சர் ஸ்ரீ சித்தராமையா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த நிகழ்வில் அரசியல், வணிகம், கல்வி, விளையாட்டு மற்றும் கலைத் துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.





# மத்துகமவில் துப்பாக்கிச் சூடு

மத்துகம, அதுல் முதலி மகா வித்தியாலயத்திற்கு பின்புறம் உள்ள வீதியில் துப்பாக்கிச் சூடு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று இடம்பெற்ற இந்த துப்பாக்கிச் சூட்டில் யாருக்கும் உயிர் சேதம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.